# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஏழாம் பத்து

## இரண்டாம் திருமொழி - புள்ளாய் ஏனமுமாய்
## திருநறையூர் 9

** புள்ளாய் ஏனமுமாய்ப் புகுந்து * என்னை உள்ளம் கொண்ட
கள்வா! என்றலும் * என் கண்கள் நீர்கள் சோர்தருமால் **
உள்ளே நின்று உருகி * நெஞ்சம் உன்னை உள்ளியக்கால் *
நள்ளேன் உன்னை அல்லால் * நறையூர் நின்ற நம்பீயோ! 1

ஓடா ஆளரியின் * உருவாய் மருவி * என்தன்
மாடே வந்து * அடியேன் மனம் கொள்ள வல்ல மைந்தா! **
பாடேன் தொண்டர் தம்மைக் * கவிதைப் பனுவல் கொண்டு *
நாடேன் உன்னை அல்லால் * நறையூர் நின்ற நம்பீயோ! 2

எம்மானும் எம் அனையும் * எனைப் பெற்று ஒழிந்ததற் பின் *
அம்மானும் அம்மனையும் * அடியேனுக்காகி நின்ற **
நன்மான ஒண்சுடரே! * நறையூர் நின்ற நம்பீ! * உன்
மைம்மான வண்ணம் அல்லால் * மகிழ்ந்து ஏத்த மாட்டேனே 3

சிறியாய் ஓர் பிள்ளையுமாய் * உலகுண்டு ஓர் ஆலிலை மேல்
உறைவாய்! * என் நெஞ்சின் உள்ளே உறைவாய் * உறைந்தது தான் **
அறியாது இருந்து அறியேன் அடியேன் * அணிவண்டு கிண்டும் *
நறை வாரும் பொழில் சூழ் * நறையூர் நின்ற நம்பீயோ! 4

நீண்டாயை வானவர்கள் * நினைந்து ஏத்திக் காண்பரிதால் *
ஆண்டாய் என்று ஆதரிக்கப்படுவாய்க்கு * நான் அடிமை
பூண்டேன் ** என் நெஞ்சின் உள்ளே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் *
நாண் தான் உனக்கு ஒழிந்தேன் * நறையூர் நின்ற நம்பீயோ! 5

என் தாதை தாதை அப்பால் * எழுவர் பழவடிமை
வந்தார் * என் நெஞ்சின் உள்ளே * வந்தாயைப் போகல் ஒட்டேன் **
அந்தோ! என் ஆருயிரே! * அரசே! அருள் எனக்கு *
நந்தாமல் தந்த எந்தாய்! * நறையூர் நின்ற நம்பீயோ! 6

மன் அஞ்ச ஆயிரம் தோள் * மழுவில் துணித்த மைந்தா! *
என் நெஞ்சத்துள் இருந்து * இங்கு இனிப் போய்ப் பிறர் ஒருவர் **
வன்னெஞ்சம் புக்கிருக்க ஒட்டேன் * வளைத்து வைத்தேன் *
நன்னெஞ்ச அன்ன மன்னும் * நறையூர் நின்ற நம்பீயோ! 7

எப்போதும் பொன்மலர் இட்டு * இமையோர் தொழுது * தங்கள்
கைப்போது கொண்டு இறைஞ்சிக் * கழல் மேல் வணங்க நின்றாய் **
இப்போது என் நெஞ்சின் உள்ளே * புகுந்தாயைப் போகல் ஒட்டேன் *
நற்போது வண்டு கிண்டும் * நறையூர் நின்ற நம்பீயோ! 8

ஊன் ஏர் ஆக்கை தன்னை * உழந்து ஓம்பி வைத்தமையால் *
யானாய் என்தனக்காய் * அடியேன் மனம் புகுந்த
தேனே! ** தீங்கரும்பின் தெளிவே! * என் சிந்தை தன்னால் *
நானே எய்தப் பெற்றேன் * நறையூர் நின்ற நம்பீயோ! 9

** நன்னீர் வயல் புடை சூழ் * நறையூர் நின்ற நம்பியை *
கன்னீர மால் வரைத் தோள் * கலிகன்றி மங்கையர் கோன் **
சொன்னீர சொல் மாலை * சொல்லுவார்கள் * சூழ் விசும்பில்
நன்னீர்மையால் மகிழ்ந்து * நெடுங்காலம் வாழ்வாரே 10

**அடிவரவு:** புள் ஓடா எம்மானும் சிறியாய் நீண்டாய் எந்தாதை மன் எப்போதும் ஊனேர் நன்னீர் சினவில்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---